1999 மே 17]

முற்பகல் 11-40

திரு. எஸ். திருநாவுக்கரசு: அரசியல் மாறுபாடு வந்தாலும் டாக்டர் கலைஞர் அவர்களும் மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களும் நேரடியாகத்தான் களத்திலே ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்வார்களே தவிர, ஒருத்தரை ஒருத்தர் நிச்சயமாக முதுகிலே குத்திக்கொள்ள மாட்டார்கள். அந்தக் கலாச்சாரம் நிச்சயமாக இரண்டு பேருக்குமே இருக்காது. எனவே இதை ஏற்கலாம் என்பது என்னுடைய வேண்டுகோள். தமிழ் மாநில காங்கிரஸைப் பொறுத்தவரை....

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பஞ்சாயத்துச் சட்டம் என்பதால் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பஞ்சாயத்து செய்யப் பார்க்கிறார். எந்தப் பஞ்சாயத்திற்கும் நாங்கள் கட்டுப்படுவதாக இல்லை. இந்தச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கின்றோம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பஞ்சாயத்திற்கும் கட்டுப்படுவதாக இல்லை என்ற ஒரு தீர்மானத்தோடு வந்திருக்கின்றவர்களிடத்தில், என்னதான் நியாயமான கருத்துக்களைச் சொன்னாலும் எடுபடப் போவது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் பஞ்சாயத்துத் தலைவர் உணர்ந்து பார்த்து தான் செய்த தவறை அவர் புரிந்துகொள்ள வேண்டுமென்று தம்பி திருநாவுக்கரசு அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் உள்நோக்கம் இருப்பதாக ஒரு நாள் சொல்லப்பட்டு, நான் உடனடியாக அதற்குப் பதில் அளித்திருக்கின்றேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், அதற்குப் பிறகு தொடர்ந்து பேசிய நம்முடைய மாண்புமிகு மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எல்லாம்கூட அதைக் குறிப்பிட்டார்கள். பொதுவாக இந்தச் சட்டமுன்வடிவு ஜனநாயக அடிப்படையிலே, ஒரு பொதுவான விவாதத்தை இங்கே உருவாக்கி இருக்க வேண்டுமேயல்லாமல், அரசியல் ரீதியாக விவாதத்தை உருவாக்கியது, உண்மையிலே, உள்ளபடியே வருந்தத்தக்கது. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் ஜனநாயக அடிப்படையிலே இந்தச் சட்டமுன்வடிவு எவ்வளவு அவசியமானது என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதே வழியை பின்பற்றித்தான் ஆளும் கட்சித் தரப்பில் ஆகட்டும் அல்லது எதிர்க்கட்சித் தரப்பில் ஆகட்டும், விவாதம் நடைபெற்று இருக்கவேண்டுமேயல்லாமல்,

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 மே 17

இதிலே தேவையில்லாமல் அரசியல் புகுந்து விட்டதற்காக நான் வருத்தப்படுகிறேன். அரசியல் புகுந்துவிட்ட காரணத்தால், நான் ஒன்றிரண்டு சான்றுகளைச் சொல்ல வேண்டியிருக்கின்றது. தமிழ் மாநில காங்கிரசுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையிலே இப்போது சில காரணங்களால் ஏற்பட்டிருக்கின்ற கருத்து மாறுபாடுகள், இன்றல்ல, 5, 6 மாத காலமாகவே இருந்து வருகின்றன. அதற்கு மூலகர்த்தா மூப்பனார் அவர்கள் அல்ல, நானும் அல்ல. இடையிலே உள்ள சில பேர் இந்த நிலை ஏற்பட வேண்டுமென்பதற்காக வெகு பிரயாசைப்பட்டு, பகீரதனைப் போலத் தவமிருந்து இந்த நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அவர்கள் "எங்கிருந்தாலும் வாழ்க" என்று அண்ணா அவர்கள் சொன்னதைப்போல நான் சொல்ல விரும்புகின்றேன். ஆனால் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

கடந்த 2 அல்லது 3 மாதங்களுக்கு முன்பு நம்முடைய அவை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, ஒரு நாள் நம்முடைய அமைச்சர் வீராசாமி அவர்கள் என்னிடத்திலே ஒரு செய்தியைச் சொன்னார். "கோயம்புத்தூரில் மேயரை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகக் கவுன்சிலர்கள் வெளிநடப்புச் செய்யப் போகிறார்களாம், ஒரு செய்தி வந்திருக்கிறது" என்று சொன்னார். என்ன காரணம் என்று கேட்டேன். அவர் சொன்னார், கோயம்புத்தூர் மேயர் அவர்கள் தமிழ் மாநில காங்கிரஸைச் சேர்ந்தவர். எனக்கும் நீண்ட நாளைய நண்பர்தான். அவர் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி மேயராக இருக்கிற காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுடைய பகுதிகளுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை, எனவே அதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்யப் போகிறார்கள் என்று சொன்னார். உடனடியாக நான், சி.டி தண்டபாணி அவர்களுக்கு—அவர் மாநகரத்தினுடைய மாவட்டச் செயலாளர் என்ற காரணத்தால்—சி.டி. தண்டபாணி அன்றைக்கு இல்லை, அப்போது இங்கே இல்லை. கோவையிலே இருந்தார். உடனடியாகத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு, இத்தகைய காரியங்களில் ஈடுபடக் கூடாது, நாமே ஒரு மேயரை அங்கே தேர்ந்தெடுத்துவிட்டு, ஏதோ இருக்கின்ற சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்காக, அரசியல்ரீதியாக ஒரு மாறுபாட்டை அங்கே காட்டக்கூடாது, வெளிநடப்புச் செய்யக்கூடாது என்று நான் சொன்னதாக, நான் ஆணையிட்டதாகச் சொல்லுங்கள் என்று சொன்னேன். அடுத்த 5 நிமிடங்களுக்கு எல்லாம், சிடி தண்டபாணி என்னைத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, உங்களுடைய ஆணையைத் தெரிவித்துவிட்டோம். அவர்களும் வெளிநடப்புச் செய்வது இல்லை

என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். இதே ஒரு நிலைமை தமிழ் மாநில காங்கிரசிலே இருந்து இருக்குமேயானால் இப்படி விவாதிக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. நான் சொன்னேன், உடனே கட்டுப்பட்டார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகிற நேரத்திலே அதை, அந்தந்தக் கட்சியினுடைய தலைமை சரி செய்திருக்க வேண்டும். என்ன காரணத்தாலோ, அப்படிச் சரி செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதுமாத்திரமல்ல. நிலைமை வளர்ந்து, வாஜ்பாய்க்கு, அந்த அரசுக்கு ஆதரவாக திராவிட முன்னேற்றக் கழகம் வாக்களித்து, வாக்களித்ததற்கான காரணத்தை நாங்கள் சொல்வதற்கு முன்பு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக, வாக்களித்ததற்கான காரணத்தைத் திருவல்லிக்கேணியிலே கூட்டம் போட்டுச் சொல்லி, அதிலேகூட திராவிட முன்னேற்றக் கழகத்தையோ, அரசையோ அல்லது முதலமைச்சரைப் பற்றியோ எதுவும் பேசவில்லை என்று நம்முடைய அழகிரி அவர்கள் Sun TV பேட்டியிலே சொன்னால்கூட, அவரே சொன்னார், Sun TV பேட்டியிலே சொன்னார், Tape Recorder இருக்கிறது போட்டுப் பார்க்கலாம் என்று நான் போட்டுப் பார்த்துதான் சொல்கிறேன். என்ன என்ன பேசப்பட்டது என்பதை. அந்தப் பிரச்சினைக்குச் செல்ல விரும்பவில்லை.

முற்பகல் 11-45

அதற்குப் பிறகுகூட, இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற உள்ளாட்சி மன்றங்களுடைய பல்வேறு இடைத் தேர்தல்கள் 400-க்கும் மேற்பட்ட இடைத் தேர்தல்களில், தலைவர் தேர்தல், உறுப்பினர் தேர்தல், இவைகளில் ஒரு பெரும் போட்டி வந்து, எல்லோரும் Nomination எல்லாம்கூடப் போடப்பட்ட ஒரு சூழ்நிலையில், நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய பொருளாளர் திரு. சுதர்சனம் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாளர் திரு. வீராசாமி அவர்களும் இரண்டு பேரும் சந்தித்து, கலந்து பேசி ஒரு கருத்தை என்னிடத்திலே சொன்னபோது, நானும், பொதுச் செயலாளர், நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும், அதைப்பற்றிச் சிந்தித்து, ஏற்கெனவே நடைபெற்று வெற்றி பெற்ற இடங்களிலே உள்ள தமிழ் மாநில காங்கிரஸ் அப்படியே தொடர்ந்து இந்தத் தேர்தலிலும் போட்டியிடட்டும். அதைப்போலவே, தி.மு.க.-வும் போட்டியிடட்டும் என்ற அந்த ஒருமித்த கருத்துக்கு நாங்கள் இணங்கினோம் என்றால், உள்நோக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருப்பதாக யாரும் கருதத் தேவையில்லை. எனவே இதே

நிலை, உள்ளாட்சி மன்றங்கள் எல்லாம் அதனுடைய ஆயுட்காலம் முடிகிற வரையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தால் கடைப்பிடிக்கப்படும் என்ற உறுதியை மாத்திரம் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல என்னுடைய தொகுதியில் இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள், ஒன்று கமுதி, இன்னொன்று முதுகுளத்தூர். கமுதி ஒன்றியத்தைத் தமிழ் மாநில காங்கிரஸ் எடுத்துக்கொண்டது. முதுகுளத்தூரை தி.மு.க.-விற்கு என்று நாங்கள் ஒதுக்கினோம். ஆனால் தி.மு.க. கவுன்சிலர்கள் வெறும் 3 பேர்தான் வெற்றி பெற்றார்கள். தமிழ் மாநில காங்கிரஸ்காரர்கள் சுயேட்சையாகப் பல இடங்களில் போட்டி இட்டு 8 இடங்களில் வெற்றி பெற்றார்கள். அங்கே தமிழ் மாநில காங்கிரஸ்தான் வர வேண்டுமென்று போராடினார்கள். அதேநேரத்தில் நான் சொன்னேன். நம்முடைய ஒப்பந்தம் பிரகாரம் இதை தி.மு.க.-விற்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லி அங்கே தி.மு.க.-வைச் சேர்ந்த ஒரு பெண் த.மா.கா-.வினுடைய முழு ஆதரவோடு இன்றுவரை தலைவியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, தமிழ் மாநில காங்கிரசும் பண்பாட்டோடு, ஏற்கெனவே பேசிக்கொண்டபடி நடந்துகொள்வதில் இதுவரையில் எந்தவிதமானக் குறைபாடும் வைத்துக்கொள்ளவில்லை என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருதரப்பிலும் அந்தப் பண்பாடு தொடர வேண்டும் என்பதற்காகத்தான் கேட்டுக்கொள்கின்றேன். இது யாரையும் வேண்டுமென்றே பாதிக்கக்கூடிய ஒன்று அல்ல. இப்போது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய முக்கிய பிரமுகர்கூட என்னிடத்திலே பேசிக்கொண்டிருந்தார். நீங்கள் வேண்டுமென்றே, எங்களுடைய பஞ்சாயத்துகளிலே, ஒன்றியங்களிலே, மாவட்ட ஊராட்சித் தலைவர்களை எல்லாம் விலக்கிவிட்டால் என்ன செய்வது என்று சொன்னார். நான் சொன்னேன். நீங்கள் இதைத்தான் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். புதுச்சேரியிலே—பாண்டிச்சேரியிலே திராவிட முன்னேற்றக் கழகம் உங்களுடைய ஆதரவிலேதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, அந்த அரசு. இப்படிச் செய்தால் நீங்கள்

அங்கே செய்யமாட்டீர்களா, அந்த பயம் எங்களுக்கு இருக்காதா என்று அரசியல்ரீதியாகக்கூட அவர்களிடத்திலே நான் சொல்லியிருக்கின்றேன். ஆகவே பயப்படத் தேவையில்லை, தீர்மானத்தை ஆதரியுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,